

# திரு. ரங்கஸ்வாமி இளங்கோ

சுய விளம்பரங்களும், உடனடி மனநிறைவுகளும் நிறைந்து காணப்படும் இன்றைய உலகில், திரு. ரங்கஸ்வாமி இளங்கோ அவர்கள் தன்னலமற்ற தன்மையின் பொழிப்பு. ரசாயன பொறியாளரான இவர், ஒரு சே குவேராவைப் போல் தமக்குக் கிடைத்த வேலை வாய்ப்புகளையெல்லாம் உதறி விட்டு, தமது கிராமத்தை சீரமைக்கச் சென்று விட்டார். மஹாத்மா காந்தி, கிராம ஸ்வராஜ்ஜியம், கிராம முன்னேற்றம் என்ற வார்த்தைகள் கேட்டவுடன் கண்கள் பளபளக்கின்றன அவருக்கு.

''முன்னேற்றத்தைப் பற்றிப் பேசுவதோ, வாக்குறுதிகள் கொடுப்பதோ மிக இலகுவான விஷயம்; அதில் இறங்கி நடைமுறைப்படுத்துவது மிகக் கடினம். எனது மக்களோடு மனத்தொடர்பு கொண்டு ஒவ்வொரு படியிலும் அவர்களது அபிப்பிராயத்தைக் கேட்டறிந்து செயல்பட்டும் கூட, கூத்தம்பாக்கத்தில் மாற்றங்களைக் கொண்டு வர எனக்கு 18 வருடங்கள் ஆயிற்று. இந்த நாட்டில் மாற்றங்களைக் கொண்டு வருவது ஒரு தனிமனிதனின் கடமையாக மட்டுமே இருக்க முடியாது'', என்று தொடங்குகிறார் திரு. இளங்கோ.

பேச்சு, முன்னேற்றத்தைப் பொருத்தவரை பல்வேறு நாடுகளின் வெற்றி, தோல்வி பற்றித் திரும்பும்பொழுது, அடிமட்டத்திற்கு அதிகாரமளித்தல் (Empowerment) பற்றியும், பரவலாக்குதல் (Decentralisation) பற்றியும் பேசுகிறார் திரு. இளங்கோ, ''முன்னேற்றம் என்பது மக்களை மையமாக வைத்து இருக்க வேண்டுமே தவிர, தலைவர்களை மையமாக வைத்து இருக்கக்கூடாது. தமது சூழ்நிலைக்கேற்றபடி இருக்கும் ஒரு முன்னேற்றக் கொள்கையை அடையாளம் கண்டு கொண்டு, ஒரு நல்ல பின்னணியை வரைந்து கொண்டுதான் அரசாங்கத்தை அணுக வேண்டும். இதுவே உண்மையான அதிகாரமளித்தலின் பொருள். வேறு யாரோ வருவார், வந்து இதனை நமக்காக செய்வார் என்றில்லாமல், உனக்கு வேண்டுமென்றால், நீதான் அதனை எடுத்துக் கொள்ளவேண்டும்.''

ரங்கஸ்வாமி இளங்கோ, பிறந்ததும் வளர்ந்ததும், கூத்தம்பக்கம் கிராமம். அரசு ஊழியரின் மகனான அவர், கிராமத்தின் முதல் பட்டதாரியானார். சென்னை ஏ.சி.டெக்கில் ரசாயன பொறியியலில் பட்டம் பெற்ற பிறகு, ஓ.என்.ஜி.சி. (ONGC) யில் சேர்ந்தார். விடுமுறைகளில், தனது கிராமத்துக்கு வந்தபொழுது, வெளி உலகம் முன்னேறிக்கொண்டிருந்தும், தனது கிராமம் மட்டும் முன்னேறாமல், சாதி-மத வெறுப்பு, கள்ளச் சாராயம் காய்ச்சுதல், மனைவியை அடித்தல், படிப்பறிவு இல்லாமை என்று பலவிதமான விஷயங்களில் மூழ்கிக் கிடப்பதைப் பார்த்தார். வேலையை ராஜினாமா செய்து, சி.எஸ்.ஐ.ஆர் (CSIR)இல் சேர்ந்து தனது கிராமத்திலேயே தமது இருப்பிடத்தை மாற்றி, தினமும் அங்கிருந்து




சென்னைக்கும், சென்னையிலிருந்து தனது கிராமத்திற்கும் பயணம் செய்தார். தமது வேர்களுக்கு அருகாமை, மற்றும் தினந்தோறும் சச்சரவுகளைக் கண்கூடாகப் பார்த்தது-இவையே ஒரு நேர்மறையான மாற்றத்தை அங்கு கொண்டு வரவேண்டும் என்ற அவரது அவாவைத் தூண்டி விட்டது. திருமணம், சில பொறுப்புகளைக் கொண்டு வந்தது; குடும்பம் அரைமனதுடன், அவரது சமுதாய சீர்படுத்தும் குணத்தை ஏற்றுக் கொண்டது.

ராஜீவ் காந்தி அரசு, கிராமங்களுக்குத் தாமே ஆளும் அதிகாரத்தை அளிக்கும் முகமாக அரசியல் சாசனத்தின் 73ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தபொழுது, தனது கனவு நனவாக இது ஒரு நல்ல வாய்ப்பு என்று உணர்ந்தார் திரு. இளங்கோ. முன்னேற்றத் தடைகளின் காரணங்களைக் கோடிட்டும், கூத்தம்பாக்கத்தின் உள்ளாற்றலை அடையாளம் கண்டு கொள்ளும் முகமாகவும், சீரான ஆய்வுகளை ஏற்கனவே செய்து வைத்திருந்தனால், செயல்முறைத்திட்டம் தயாராக இருந்தது. தேவைப்பட்டது அதிகாரம் மட்டும்தான். உள்ளூர் குண்டர்க்களின் எதிர்ப்புகளை மீறி, பஞ்சாயத்துத் தலைவரானார். கள்ளச்சாராய ஒழிப்பு, கல்வி கற்பதற்கான சரியான சூழ்நிலை, வேலை வாய்ப்புகளை உருவாக்குவது - இவையே அவர் முதல் குறிக்கோள். இரவு பகல் பாராமல் மக்களுக்காக உழைத்தும், ‘சிவப்பு நாடா’ ‘கொள்ளை லாபம் அடிப்பவர்கள்’ என்ற சதுப்பு நிலங்களை சந்திக்க வேண்டியிருந்தது சமயத்தில், காந்தியடிகளின் ‘சத்திய சோதனை’ புத்தகத்தை அவருக்குக் கொடுத்து, வன்முறை சேற்றிலிருந்து அவரை மீட்டு ஒரு தீவிர சீர்திருத்தவாதியை முழுமையான காந்தியவாதியாக்க உதவிய தனது மனைவியை அவர் நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறார்.

இந்த சந்தர்ப்பத்தில், இளங்கோ அவர்கள், பல கிராமங்களுக்குச் சென்று, நிலையான முன்னேற்றம் பற்றியும், பலவித விவசாய முறைகளைப் பற்றியும் தெரிந்து கொண்டார். அப்பொழுது, கர்நாடகா மாநிலத்தில் உள்ள ஹுப்ளி, தார்வாட் பகுதிகளில்,வறண்ட நிலப்பாசனம் மற்றும் சாத்தியமான விவசாய முறைகளை பலருக்கும் பரப்பி வரும் ஒரு மனிதரை சந்தித்தார். மாற்றங்களை நிகழ்த்தும் கருத்துகளுக்கு ஆதரவு அளிக்கும் ‘அசோகா நிதியுதவி திட்டம்’ இந்த செயல்முறைக்கு உதவி செய்தது. சிறிது காலத்துக்குள் பல கடுமையான நுண்ணாய்வுகளுக்கும், மதிப்பீடுகளுக்கும் பிறகு இளங்கோ அவர்களுக்கு மூன்றாண்டு காலத்திற்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டது. தம்மை மீண்டும் புதுப்பித்துக் கொள்ளவும், தமது பேரார்வங்களை ஒத்ததாக ஆக்கிக் கொள்ளவும் அவருக்கு இது உதவியது. உலகெங்கும் இருக்கும் பல தீர்க்கதரிசிகளுடன் பழகும் வாய்ப்பு இதனால் அவருக்குக் கிட்டியது. தமது குடும்பத்திற்கு உணர்ச்சி பூர்வமான ஆதரவு அளித்து, தமது குழந்தைகளுக்கு எப்பொழுதும் தம்மை விட்டு வெளியிலேயே இருக்கும் தந்தை ‘நல்நோக்குக் குறிக்கோள் நிறைந்த ஒரு மனிதன்’ என்று புரிய வைத்தது இது என்று கசப்புடன் கலந்த அந்த இனிமையான தருணங்களை நினைத்துப் பார்க்கிறார் இளங்கோ.

பல சமூகங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்றாக ஒத்திசைவுடன் வாழ்வதற்காக தமிழக அரசு கொணர்ந்த வீட்டு வசதித் திட்டமாகிய ‘சமத்துவபுரத்தை’ உருவாக்கி செயல்படுத்தியதே அவர் முதன்முதலில் செய்த பணிகளில் ஒன்றாகும். பெரிய வீடுகளை வடிவமைப்பது, பசைமண் சாலைகள் (Cement Roads) அமைப்பது, குடிநீர் நிர்வாக திட்டம் வரைவது என்று இடுபணிகளை தமக்குத் தாமே எடுத்துக்கொண்டு, செயல்படுத்தினார். கட்டிடங்களுக்கு உள்ளூர் மண், கட்டுவதற்கு உள்ளூர் தொழிலாளிகள் என்று வழிவகுத்துக்கொண்டதால், கட்டும் செலவு குறைய, மண்ணில் விளைந்த பயிர்களைப் பதனிடவும்,பள்ளி மாணவர்களுக்குத் துணிமணி மற்றும் புத்தகங்கள் வாங்கவும், மீதமுள்ள பணத்தை உபயோகப்படுத்த முடிந்தது. தனது மக்களின் குறுகிய கால மற்றும் நெடுங்காலத் தேவைகளை அவர்கள் மூலமாகவே கேட்டறிந்ததன் மூலம் இவையெல்லாவற்றையும் அவரால் சாதிக்க முடிந்தது. ‘முன்னேற்றத்தில் உள்ளூர் மக்களை முழுவதுமாக ஈடுபடுத்துவது’ எனும் இந்த

‘‘இது போல இன்னும் 50 பஞ்சாயத்துகள் இருந்தால் போதும். கிராமங்களிலிருந்து இந்தியாவை புனரமைப்பு செய்யும் மகாத்மா காந்தியின் கனவு கண்டிப்பாக நிறைவேறும்,’’ என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் இவர்.



அம்சம்தான் பிற பஞ்சாயத்துகளிலும் செயல்படுத்த அவர் நினைப்பது. இதுவே அவர்களது தொலைநோக்குப் பார்வையாக இருக்கவேண்டும். ஜனநாயகம் என்பது ஒருதனி மனிதனின் உரிமை அல்ல; அது ஒவ்வொரு மனிதனின் கடமை-தன்னை நோக்கி, தன் சமூகத்தை நோக்கி, தனது நாட்டை நோக்கி.

இன்னொரு புறம், பெரிய தொழிற்சாலைகளின் தேவைகளுக்காக, அளவுக்கு மீறி  பயிரிட்டதால், மண் வறண்டு போனது. தொழில்மயமாக்குதல் (Industrialisation) என்பது, விவசாயியின் ஆன்மாவை உறிஞ்சி அவனை ஒரு கடனாளியாக ஆக்கி விட்டது. தொன்றுதொட்டு இருந்துவரும் விவசாய முறைகளை அவன் மறந்துவிட்டானாதலால், இடைத்தரகர்களிடம் தனது விளைபொருள்களை மிகவும் குறைந்த விலைக்கு விற்கும் சூழலுக்கு தள்ளப்பட்டிருக்கிறான். உணவு உற்பத்தியாளனே, தனது பொருளை அதிக விலை கொடுத்து வாங்கவோ அல்லது அரசு துயருதவியையோ நம்பியோ இருக்க வேண்டியிருக்கிறது. இது ஒரு கிராமத்தின் கதை அல்ல. நமது நாட்டின் எல்லா கிராமங்களின் நிலை இதுதான். இந்த நியாயமற்ற வேறுபாடு, அவருக்குப் பல தூக்கமில்லா இரவுகளை அளித்தது, தீர்மானம் காணும் வரையில். குன்றக்குடி அடிகளாரின் கிராம திட்டப் பேரவையில் பணி புரிந்தது ஒரு திருப்பு முனையாக அமைந்தது அவருக்கு. விவசாயியின் முக்கியத்துவமும், அவன் ஒரு பெருமதிப்பு மிக்க உற்பத்தியாளன் என்பதும் அவருக்கு நன்றாகப் புரிந்திருந்ததால், அவர்களுக்கு பாதுகாப்புடன் கூடிய நிலையான பொருளாதாரத்தின் தேவையை அவர் நன்கு உணர்ந்திருந்தார். மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் விவசாயம் தொடர்பான தொழிலில் இருக்கும் நமது நாட்டில் இது இன்னும் அத்தியாவசியமாகிறது. எனவே, விவசாயத்தொழிலுக்கும், நாட்டுப்புறக் கலைகளுக்கும் உண்டான கண்ணியத்தைத் திரும்பக் கொண்டு வர பலவித முயற்சிகள் எடுக்கிறார். தொன்றுதொட்டு வழங்கப்படும் உணவு பதப்படுத்தும் முறைகளை மீண்டும் கொணர்ந்து, கிராமக் குழுக்களை அமைத்து, ஒருவருக்கொருவர் அவர்களது தனித்தன்மை மிகுந்த விளைபொருள்களுக்கு ஆதரவு அளித்துக்கொள்ளும்படி செய்திருக்கிறார். அவரது ‘பரிசோதனை வட்டாரத்தை’ (Experiment Block) சுற்றிப் பார்க்கும்பொழுது, ஒரு பெரிய தொழிற்சாலையில் உருவாக்கக்கூடிய அளவு பருப்பு வகைகள், எண்ணெய், மாவு இவைகளைக் குறைந்த மின்சாரத்தில் தயாரிக்கும் உபகரணங்களை அங்கே காண்கிறோம். இந்த உபகரணங்களால், சுற்றுப்புரச் சூழலுக்கு உண்டாகும் பாதிப்பு மிக மிகக் குறைவே என்கிறார் இளங்கோ. அவரது பார்வை பொதுவுடைமையைச் சார்ந்து இருந்தாலும், இடைத்தரக பொருளாதாரத்தை அவர் மிகக் கடுமையாகச் சாடினாலும், விவசாயிகள் மீதும் சுற்றுப்புரத்தின் மீதும் அவர் காட்டும் பரிவு மனப்பூர்வமானது.

மதிலக வளைவின் எதிர்ப்பகுதி, கிரோசின் அடுப்புகளுக்கான தகளி (Burner) தயாரிக்கப்படும் சிறுதொழில் நிறுவனத்திற்காக உபயோகப்படுத்தப்படுகிறது. தகளிகள், அவர்களது தேவைகளுக்காகவும், வெளிச்சந்தையில் விற்பனைக்காகவும் தயாரிக்கப்படுகின்றன. இன்னொரு பகுதியில், மின்விசிறிகள், விளக்குகள் மற்றும் சூரிய மின்கலத்திற்கான இரும்புச் சட்டங்கள் (Solar Panels), மீள்சுழற்சிப் (Recycled) பொருட்களிலிருந்துத் தயாரிக்கப்படுகின்றன. அடுத்த செயல்முறைத்திட்டமாக தனது கிராமத்தின் மின்சாரத் தேவை குறித்தும், மாநிலத்திலிருந்து வரும் மின்சாரத்தை சார்ந்து இருக்கும் நிலையை மாற்றுவது குறித்தும் யோசிக்க ஆரம்பித்து விட்டார் அவருக்குள் இருக்கும் விஞ்ஞானி.

இந்த சிறுதொழில் தொழிற்சாலைகளில் பணி புரியும் பெண்கள், கள்ளச்சாராயம் காய்ச்சும் பணியில் ஈடுபட்டிருந்ததாகவும், அதிலிருந்து அவர்களை மீட்டு, இங்கு பயிற்சியளித்து வேலையில் அமர்த்தியதாகவும் விளக்கினார் இளங்கோ. தமது பாதையை மாற்றிக் கொண்ட அவர்களது மனோதிடத்தைப் பற்றி சிலாகித்துப் பேசுகிறார் அவர்.

தனது ‘புதிய குழந்தையாகிய’ அடுமனையை நமக்குக் காட்டுகிறார் இளங்கோ. கிராமத்தின் மாவாலைகளிலிருந்தும், பால் பண்ணையிலிருந்தும், இங்கு உணவுப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. தன்னையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் இந்த மனிதரின் சாதனையைக் கண்டு நாம் அடையும் வியப்பை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது.

பல்லடம் மற்றும் மேட்டுப்பாளைய பஞ்சாயத்துகளிலும் இதைப் போலவே செய்து வெற்றி கண்டிருக்கிறார். இவர் நடத்தும் பஞ்சாயத்து கழகத்தில், நாடெங்கிலும் உள்ள பஞ்சாயத்துத் தலைவர்களை அழைத்து குடிநீர் திட்டம், மீள்சுழற்சி, நிலையான குடிசைத் தொழிலை அமைப்பது முதலிய விஷயங்கள் பற்றி கருத்துப் பரிமாற்றம் நிகழச் செய்கிறார். அசீம் ப்ரேம்ஜீ பல்கலைக்கழகத்திலும், அயல்நாட்டு சர்வகலாசாலைகளில் பயிலும் இந்திய மாணவர்களுக்கும் இவர் விரிவுரை நிகழ்த்தியிருக்கிறார். தானாதிபதிகளுக்கும் (Diplomats) நிர்வாக ஆட்சியாளர்களுக்கும் (IAS Officers), இவரது கருத்துக்களையும் எண்ணங்களையும் விளக்கியிருக்கிறார். கிராம ஸ்வராஜ் நோக்கி இவர் இட்ட பாதையை செயல்படுத்தத் தயாரக இருக்கும் 1000 பஞ்சாயத்துகளை அடையாளம் கண்டிருக்கிறார் இவர். ‘‘இது போல இன்னும் 50 பஞ்சாயத்துகள் இருந்தால் போதும். கிராமங்களிலிருந்து இந்தியாவை புனரமைப்பு செய்யும் மகாத்மா காந்தியின் கனவு கண்டிப்பாக நிறைவேறும்,’’ என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் இவர்.

சமீபத்தில் நாளிதழ் ஒன்றில் வந்த கட்டுரை, அறிவுக்கும் (Intelligence) அறிவுத்திறத்திற்கும் (Intellect) உள்ள வேறுபாட்டைப் பற்றி விவரித்தது. அதன்படி, அறிவு (Intelligence) புத்தகங்கள் மூலமாகவும், ஆசிரியர்களிடமிருந்தும் வளரும் ஒன்று.  வளர்ந்த அறிவை எப்படி நடைமுறையில் மரியாதையுடன் உபயோகப்படுத்துவது என்பதே அறிவுத்திறன் (Intellect). தனது விஞ்ஞான அறிவை கீழ்மட்டத்தில் இருக்கும் மக்களுக்காகப் பயன்படுத்தி, சகமனிதர்களையும், வளத்தையும், வாழ்க்கையையும் மதிக்கும் திரு. ரங்கஸ்வாமி இளங்கோவின் அறிவுத்திறன், மனிதப் பண்பு பற்றிய ஒரு பாடம். இவர், ஒரு தலைசிறந்த வெற்றி வீரர்!